# தமிழன் இதனை ஸஹிப்பானா?

## மொழி உயிரினும் பெரிதல்லவா?

## தமிழர் எதிர்ப்பு வெறு மிரட்டாம்.

# இரண்டு நபர்கள் சூழ்ச்சியாம்.

### ஆச்சாரியார் எள்ளி நகையாடுகிறார்!

### தமிழ்க்கொலை தவிர்க்க இனி வழியென்ன?

### உண்ணாவிரதமிருந்து உயிர்விடுவதே.

## சேலம் தோழர் மாணிக்கம் உறுதி.

(நமது நிருபர்)

**சேலம், ஏப்ரல், 27**

தமிழரின் சார்பாக ஓர் அமைதியான முடிவுகாண வேண்டுமென்ற பெரும் நோக்கத்துடன் சேலம் தோழர் ஆ. மாணிக்கம் அவர்கள் உண்ணாவிரத நோன்பை மேற்கொள்வதாகத் தீர்மானித்து விட்டார்.

முதல் மந்திரியும் இந்தி கட்டாய பாட ஏற்பாட்டின் கர்த்தாவுமான கனம் சி. ராஜகோபாலாச்சாரியார் பிறந்த ஊரிலே இந்தி எதிர்ப்பை பலமாகவும் திறம்படவும் முன்னின்று நடத்தி சட்டசபையிலும் அதுபற்றி கேள்வி பிறக்குமாறு செய்தவர் மாணிக்கம் என்பதை குறிப்பிடுவது அவசியம் என்று நினைக்கிறேன்.

தோழர் மாணிக்கம் அவர்கள் இந்தி எதிர்ப்பு சம்பந்தமாய் தனது வியாபார ஜோலிகளுக்கு இடையிலும்கூட தமிழ் ஜில்லாக்கள் பலவற்றிலும் சுற்றுப் பிரயாணம் செய்து கட்டுப்பாடாக வேலை செய்யும் பொருட்டு தமிழர் கழகத்தை ஆங்காங்கும் அமைக்க முன் வந்து உழைத்து வருகிறார்.

இவர் மாத்திரமின்றி இவர் குடும்பமே காங்கரஸ்காரர்கள் நன்றி செலுத்தத் தக்க அளவு உயிரையும் பொருளையும் கருதாமல் உதவி யிருக்கிறது என்று சொல்வது மிகையாகாது.

காங்கரஸுக்காக கடைசி வரையில் திருச்சி ஜெயிலில் பிடிவாதமாக இருந்து உயிரையும் தியாகம் செய்த மாணிக்கம் அவர்களும் இக்குடும்பத்தைச் சேர்ந்தவரே.

இவரும் இன்றளவும் காங்கிரஸ்காரராகவே இருந்து வருகிறார்.

ஆனால் இவர் தமிழனுக்குத் தமிழ் உயிரினும் அரிய பொக்கிஷம் என்று கருதுவதால் காங்கிரஸ் செல்வாக்கைக் கொண்டு தமிழும் தமிழர் உணர்ச்சியும் அழிக்கப்படுவதைக் காணச் சகியாமல் உண்ணா விரதம் மேற்கொள்வதென்று தீர்மானித்து விட்டார்.

இவரின் ஆழ்ந்த தமிழ் அபிமானத்தையும் மன உறுதியையும் நன்கு அறிந்தவர்கள் இந்த முயற்சியின் முடிவு என்னவாகும் என்று சந்தேகப்பட அவசியமே இல்லை.

இந்தத் திடுக்கிடும் செய்தியை அவருடைய நண்பர்கள் வாயிலாக அறிந்த நான் அவரை நேரில் கண்டு சம்பாஷித்ததின் விவரம் வருமாறு:—

**கேள்வி**

தாங்கள் இந்தி கட்டாய பாடத்தை எதிர்த்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக கேள்விப்பட்டேன். அம்மாதிரி முடிவுக்குத் திடீரென்று வரக் காரணம் என்ன?

**பதில்**

மே மாதம் 1ம் தேதி முதல் உண்ணா விரதம் மேற்கொள்வதாக உறுதி செய்து விட்டேன்.

இதைப் பலர் எதிர்பார்க்காமல் இருந்து இருக்கலாம்.

ஆனால் என்னைப் பொறுத்த வரையில் இம்மாதிரி சந்தர்ப்பத்திற்கு இடம் இருக்காதென்றே ஆரம்பம் முதல் கருதி வந்தேன்.

என்றைக்கு இந்திப்போர் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டதோ அது முதல் அதுபற்றித் தமிழ் நாட்டில் நடந்து வந்திருக்கும் சம்பவங்களையும் கவனித்தும் வந்தேன்.

தமிழ் நாட்டவரின் அமைதியான முயற்சிகளெல்லாம் லட்சியம் செய்யாமல் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றன.

தமிழரின் உணர்ச்சிகளில் சந்தேகம் கொண்டு எனது நண்பர் கனம் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கொஞ்சமும் மனமிரங்காமல் காங்கரஸ் விரோதி, ஆரிய விரோதிகளான இரு நண்பர்களின் கிளர்ச்சிதான் இது என்றும் வெளிப்படையாக சொல்லிவிட்டார்.

ஆதலின் தமிழரின் கடைசி முயற்சியாகவும் கருவியாகவும் உண்ணாவிரதத்தை மேற்கொள்ள முடிவு செய்தேன்.

**கேள்வி**

தங்களுடைய இந்த அபிப்பிராயத்தை கனம் ராஜகோபாலாச்சாரி அவர்களுக்குத் தெரிவித்து இருக்கிறீர்களா?

அல்லது இதைவிட சுலபமாகப் பின்பற்றக்கூடிய வழிகள் இல்லையா?

**பதில்**

வேறு வழிகளா? இல்லை.

எல்லாம் முயன்று பார்த்தாய்விட்டது.

மூன்று நான்கு கடிதங்கள் கனம் முதன் மந்திரியாருக்கு எழுதியும் பதில் வருவதாக இல்லை.

21—4—38ல் ரிஜிஸ்டரில் அனுப்பிய இறுதி கடிதத்தில் நான் மே மாதம் 1-ம் தேதி முதல் உண்ணாவிரதமிருக்கப் போவதான முடிவைத் தெரிவித்துவிட்டேன்.

அதற்கும் இதுவரையில் ஒருவகை பதிலும் இல்லை.

**கேள்வி.**

உண்ணாவிரதத்தால் தங்களின் முயற்சி வெற்றிபெறும் என்று தாங்கள் நினைக்கிறீர்களா?

**பதில்.**

தமிழன் என்கிற முறையில் எனக்கு வெற்றி தோல்விகளைப் பற்றிய கவலையே இல்லை.

ஆனால் இது சம்பந்தமாக தமிழ் நாட்டில் அமைதிக்கும் சமாதானத்திற்கும் பங்கம் உண்டாகாதவாறு தடு